**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 531/2025**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஸ்டீபன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | அருள்ராஜ் | தொழில் | : | சிறப்பு உதவியாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | பாவூர்சத்திரம் | வயது | : | 63 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 17.04.2026.

**(3ம் எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். இதர எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். நான் கடந்த 29.10.2017 ம் தேதி ஊத்துமலை காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, காலை 09.00 மணிக்கு ஊத்துமலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.நிஷாந்த் அவர்கள் தலைமையில் நானும், தலைமைக்காவலர் குத்தாலிங்கம், காவலர்கள் திரு.ஐயப்பன், நயினார்சாமி ஆகியோர் சகிதம் மதுவிலக்கு சம்பந்தமாக ஊத்துமலை - வீராணம் ரோட்டில் கருவந்தா விலக்கில் வாகனத்தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, தெற்கிலிருந்து வடக்காக TN-76-P-0869 என்ற பதிவெண் கொண்ட கீரோ ஸ்பெலண்டர் இருசக்கரவாகனத்தை ஒரு நபர் ஓட்டிய படியும், பின்னால் ஒரு நபர் கையில் 2 அட்டைப் பெட்டியுடன் வந்தவர்களை சந்தேகத்தின் பேரில் தணிக்கை செய்ய முற்பட்டபோது அவர்கள் தப்பியோட எத்தணித்தவர்களை மடக்கி பிடித்து விசாரித்தபோது

இருசக்கரவாகனத்தை ஓட்டி வந்தவர் கண்ணன் என்றும், பின்னால் இருந்தவர் சுவிசேஷராஜ் என்பதும் தெரிய வந்தது. எதிரிகளை எனக்கு தெரியும். பின்னால் இருந்த நபரின் கையில் வைத்திருந்த அட்டைப்பெட்டியை சந்தேகத்தின் பேரில் திறந்து பார்க்க ஒவ்வொரு அட்டைப்பெடடியிலும் 750 மிலி பிடிக்கக்கூடிய ரேஸ் விஸ்கி என்று லேபிள் ஒட்டப்பட்ட பழுப்பு நிற திரவத்துடன் தலா 12 பாட்டில்கள் வீதம் மொத்தம் 24 பாட்டில்கள் காணப்பட்டன.

சந்தேகத்தின் பேரில் ஒரு பாட்டிலை திறந்து முகர்ந்து பார்க்க அதில் விஷ நெடியுடன் விஸ்கி காணப்பட்டது. கண்ணன் மற்றும் சுவிசேஷராஜ் ஆகிய இருவரையும் விசாரித்தபோது அதிக போதை உண்டாக்குவதற்காக போதை வஸ்து கலந்து ஊத்துமலை சுற்று வட்டாரங்களில் விற்பனை செய்ய கொண்டு வந்ததாகவும், இது போன்று கண்ணனின் தம்பி சரவணனும், கேரளா மாநிலத்தை சேர்ந்த ஜார்ஜ் என்ற ஜார்ஜ் சாமு என்பவரும் தங்களுக்கு உதவியாக இதுபோன்று விஸ்கியை ஊத்துமலை சுற்று வட்டாரங்களில் விற்பனை செய்து வருவதாக கூறினார்கள்.

காவல் உதவி ஆய்வாளர் எந்தவித அரசு அனுமதியின்றி விஸ்கி கடத்தி விற்ற குற்றத்திற்காக மேற்படி நபர்கள் இருவரையும் கைது செய்து, திறந்து முகர்ந்து பார்க்கப்பட்ட பாட்டில்களில் இருந்து மாதிரிக்காக 375 மிலி பிடிக்கக்கூடிய 2 பாட்டில்களில் தலா 300 மிலி எடுத்து SHO சீல் வைத்து மீதமுள்ள 24 பாட்டில்களில் SHO சீல் வைத்தும் ஏற்கனவே கொண்டு செல்லப்பட்ட மடிக்கணினியில் உதவி ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து பாட்டில்கள் அனைத்தையும், விஸ்கி கடத்தி கொண்டு வரப்பட்ட மோட்டார் சைக்கிளையும் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்து போட

முன்வராததினால் போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே கையெழுத்து செய்தோம்.

என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.1** ஆகும். அத்தாட்சியில் கைப்பற்றிய சொத்துக்கள் மற்றும் எதிரிகள் சகிதம் நிலையம் காலை 10.00 மணிக்கு வந்து காவல்நிலைய குற்ற எண்.248/2017, சட்டப்பிரிவுகள் 4(1-A) TNP Act-ன் படி வழக்கு பதிவு செய்ய நான் காவல் உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் காவல் ஆய்வாளருக்கு தகவல் தெரிவிக்கவும், காவல் ஆய்வாளர் நிலையம் 11.00 மணிக்கு வந்து நிலையத்தில் வைத்து ஆஜர் சாட்சிகளான அதிபதி, தங்கத்துரை ஆகியோர் முன்னிலையில் எதிரி கண்ணன் என்பவரை விசாரிக்க அவர் எந்தவித துன்புறுத்தலும், ஆசை வார்த்தைகளுமின்றி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தன்னை கூட்டி சென்றால் ஆலங்குளம் – துத்திகுளம் ரோட்டில் உள்ள விநாயகா ரைஸ் மில்லிற்கு எதிர்புறமுள்ள எலுமிச்சை தோட்டத்தில் இவ்வழக்கு சம்பந்தமான அனைத்து சொத்துக்களையும் அடையாளம் காட்டி ஆஜர் செய்வதாக சொன்னதின் பேரில் காவல் ஆய்வாளர் ஆஜர் சாட்சிகள் மற்றும் எதிரி கண்ணன் சகிதம் போலீஸ் பார்ட்டிகளாகிய எங்களை மேற்படி தோட்டத்திற்கு மதியம் 13.00 மணிக்கு கூட்டிச் சென்றார். தோட்டத்திலுள்ள மோட்டார் அறையில் 180 மிலி பிடிக்கக்கூடிய மூடியில்லாத டாஸ்மார்க் காலி பாட்டில்கள் ஒரு சாக்கில் 100 பாட்டில்கள் வீதம் 40 சாக்குகள் அடையாளம் காட்டி ஆஜர் செய்தார்.

அது போன்று 180 மிலி பிடிக்கக்கூடிய லேபிள் ஒட்டியும், ஒட்டாமலும் உள்ள விஸ்கியுடன் கூடிய 144 பாட்டில்கள், 750 மிலி பிடிக்கக்கூடிய லேபிள் ஒட்டியும், ஒட்டாமலும் உள்ள விஸ்கியுடன் கூடிய 210 கண்ணாடி பாட்டில்கள், 40 வெள்ளை கேன்களின் உடைந்த பாகங்கள் ஆகியவற்றை அடையாளம் காட்டி ஆஜர் செய்தார். ஆஜர் செய்யப்பட்ட 750 மிலி பாட்டில்களில் 4 ஐயும், 180 மிலி பாட்டில்களில் 4 ஐயும் மாதிரிக்காக SHO சீல் வைத்து அத்தாட்சியில் கைப்பற்றினார். அத்தாட்சியில் ஆஜர் சாட்சிகள் கையெழுத்திட்டனர். பின்னர் எதிரி மற்றும் சொத்துக்கள் சகிதம் ஊத்துமலை காவல்நிலையம் சென்றோம். இது சம்பந்தமாக என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.19 13:41:41 +0530